

விருதுநகரில் நடைபெற்ற தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி தென்மண்டல கூட்டத்தில், அணியின் செயலாளரும், நாடாளுமன்றக் குழு துணைத்தலைவருமான தயாநிதி மாறனுக்கு நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. மேடையில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம்தென்னரசு மற்றும் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடன் வளர்ச்சிப் பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, மாநகராட்சி மேயர்கள் சண்.இராமநாதன், க.சரவணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், மாவட்ட ஊராட்சித்தலைவர் உஷாபுண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர் மு.பாலகணேஷ் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### தருமபுரி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில்

# வேளாண்மைத்துறை சார்பில் ரூ. 133 கோடியில் நலத்திட்டங்களை வழங்கியுள்ளார் முதல்வர்!

## புத்தகத் திருவிழாவினை துவக்கி வைத்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!



தருமபுரி, அக்.6-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் வேளாண்மைத்துறை சார்பில் ரூபாய் 133 கோடி மதிப்பிலான நலத்திட்டங்களை வழங்கி உள்ளார் என தருமபுரியில் புத்தகத் திருவிழாவினை துவக்கி வைத்து வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசினார்.

தருமபுரி மாவட்டம், மதுராபாய் சுந்தரராஜ் ராவ் திருமண மண்டபத்தில் தருமபுரி மாவட்ட நிர்வாகம், தகடூர் புத்தக பேரவை மற்றும் பாரதி புத்தகாலயம் ஆகியவை இணைந்து நடத்தும் 6ஆம் ஆண்டு புத்தகத் திருவிழாவினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர்.ஆ.மணி, பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே. மணி, தருமபுரி சட்டமன்ற உறுப்பினர், எஸ்.பி.வெங்கடேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்து, புத்தக திருவிழாவில் அமைக்கப்பட்டிருந்த புத்தக அரங்குகளை பார்வையிட்டார்.

பின்னர் விழாவில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசுகையில் தெரிவித்ததாவது:

**மாவட்டந் தோறும் புத்தகத் திருவிழா!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்டந் தோறும் புத்தக திரு விழாக்களை நடத்தி, புத்தக வாசிப்பை அதிகரிக்க செய்ய வேண்டுமென ஆணையிட்டுள்ளார்கள். இதனை தொடர்ந்து, மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்களின் புத்தக வாசிப்பு, அறிவை பெருக்கும் வகையிலான இப்புத்தகத் திருவிழாக்கள் மாவட்டங்கள்தோறும் நடத்திட தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கீடு செய்து, புத்தக திருவிழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றது.

தருமபுரி மாவட்டத்தில் இப்புத்தக திருவிழா நடத்திட அரசின் சார்பில் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நூலக வாசிப்பு பழக்கத்தை பொதுமக்களுக்கு ஏற்படுத்த அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் என்ற திட்டத்தை அறிவித்து செயல்படுத்தினார்.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து ஊராட்சிகளும் ஒரு நூலகம் அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, நூலகம் அமைக்கப்பட்டு புத்த கங்கள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, தருமபுரி மாவட்டத்தில் 6ஆம் ஆண்டு புத்தகத் திருவிழா 13.10.2024 வரை 10 நாட்கள் நடைபெறுகின்றது. பொதுமக்கள் கலந்து கொள்கின்ற பொதுநிகழ்வான இப்புத்தக திருவிழாவில் கலந்துகொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்புத்தக திருவிழாவில் 60க்கும் மேற்பட்ட அரங்குகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தலைப்புகளில் இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சம் மதிப்பில் விற்பனை செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ள்ளது. கடந்த ஆண்டு நடைபெற்ற புத்தக திருவிழாவில் 60 ஆயிரம் நபர்கள் கலந்து கொண்டு ரூபாய் 1 கோடி மதிப்பில் புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. வாசிப்பின் முக்கியத்துவம் பற்றியும், பெண்கல்வி பற்றியும், சமூகம் சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாகப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதனைச் சார்ந்து, போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெறும் மாணவர்களுக்குப் புத்தகத் திருவிழாவில் பரிசுகள் வழங்கப்பட உள்ளது.

**நல்ல புத்தகங்கள் ஒரே இடத்தில் பெரும் வாய்ப்பு!**

நாம் அனைவரும் தினம் தினம் ஏதாவது ஒன்றை புதிது புதிதாக கற்றுக் கொள்கிறோம். கற்றலில் பல வகை இருப்பினும் புத்தக வாசிப்பின் மூலம் கற்றுக்கொள்ளுதல் என்பது மிக முக்கியமா னது. பல நூல்களைப் படிப்பதன் மூலம் சிறந்த அனுபவத்தை பெறுவதொடு, உயர்ந்த அறிவை நம்மால் பெற முடியும். மேலும், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் சிறப்பான வாழ்க்கைக்கும், சிறந்த வளர்ச்சிக்கும் கல்வி மிக மிக அவசியம் என்பதை உணர்ந்து, கட்டாயம் புத்தக வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்திகொண்டு, நன்றாக கல்வியினை கற்க வேண்டும்.

நாம் ஒரு புத்தகத்தை படித்து விட்டால், அடுத்தடுத்து தொடர்ந்து புத்தகங்களை படிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டு விடும். நாம் நம் வாழ்க்கையில் மிகச்சிறந்த உயரத்திற்கு செல்ல வேண்டுமானால் புத்தகவாசிப்பை தினந்தோறும் பின்பற்றி கற்றல் வேண்டும். இந்த புத்தகத் திருவிழா இலட்சக்கணக்கான நல்ல புத்தகங்களை ஒரே இடத்தில் பெறுவதற்கான அருமையான வாய்ப்பாகும். தமிழ்நாடு அரசு உருவாக்கி தந்திருக்கின்ற இந்த பெரிய வாய்ப்பை அனைவரும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

புத்தகத் திருவிழாவிற்கு வருகை தந்து அரங்குகளை பார்வையிட்டு சென்று விடுவதோடு நிறுத்திக் கொள்ளாமல், புத்த கங்களை வாங்கி சென்று, புத்தக வாசிப்பு மேற்கொண்டு மிகச் சிறந்த ஆளுமை மிக்க மனிதராக வாழ்வில் முன்னேறுவ தோடு, அறிவை பெருக்கி கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் வேளாண்மைத்துறை சார்பில் ரூபாய் 133 கோடி மதிப்பிலான நலத்திட்டங்களையும், மகளிர் உரிமைத்தொகை, புதுமைப் பெண் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம், விடியல் பயணம், நான் முதல்வன், ஒகேனக்கல் கூட்டுகுடிநீர் திட்டம், தருமபுரி சிப்காட் அமைத்தல், கலைஞரின் கனவு இல்லம் போன்ற திட்டங்களின் மூலம் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் சிறப்பான திட்டங் களை வழங்கியுள்ளார்.

தருமபுரி மாவட்டத்தில் காவிரி ஆற்றில் கிடைக்கப்பெறும் உபரி நீரை மாவட்டம் முழுவதும் உள்ள வறண்ட பகுதிகளில் உள்ள ஏரிகளில் நீர் நிரப்புவதற்காக தருமபுரி காவிரி உபரிநீர் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தும். இவ்வாறு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

**போட்டித் தேர்வு மாணவர்களுக்கு நிதி உதவி!**

இதனை தொடர்ந்து, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தனது சொந்த நிதியிலிருந்து ரூபாய் 1 இலட்சம் மதிப்பிலான தமிழ் மற்றும் ஆங்கில புத்தகங்களை அதியமான்கோட்டை மற்றும் அரூர் ஆகிய 2 நூலகங்களில் போட்டித்தேர்விற்கு தயாராகும் மாணவர்கள் பயில்வதற்கு மாவட்ட நிர்வா கத்திடம் வழங்கினார்.

தருமபுரி புத்தக திருவிழாவை முன்னிட்டு பல்வேறு தலைப்புகளில் நடைபெற்ற கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி மற்றும் பேச்சுபோட்டிகளில் வெற்றி பெற்ற 30 மாணவ, மாணவியர்களுக்கு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் புத்தகப் பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

மேலும், இப்புத்தக திருவிழாவில் தீராப்பெரு வெளி மற்றும் விடுதலை போரில் தருமபுரி ஆகிய 2 புத்தகங்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வெளியிட்டார்.

விழாவில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌரவ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ. சுப்பிரமணி, முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன், தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி. காயத்ரி, தருமபுரி தகடூர் புத்தகப் பேரவை செயலாளர் டாக்டர்.இரா.செந்தில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. ஜோதிசந்திரா, தருமபுரி நகர்மன்ற தலைவர் திருமதி.லட்சுமி நாட்டான் மாது, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மோகன், வட்டாட்சியர் சண்முகசுந்தரம், மாவட்ட நூலக அலுவலர் திருமதி. அர.கோகிலவாணி மாநில கைம்பெண் நலவாரிய உறுப்பினர் திருமதி.ரேணுகாதேவி, தகடூர் புத்தகப் பேரவை தலைவர் இரா. சிசுபாலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி அணையிலிருந்து விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் தண்ணீரை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, நீர்வளத்துறை செயற்பொறியாளர் பாலமுருகன், ஒன்றியக் கழக செயலாளர்கள் சா.ராஜமாணிக்கம், எஸ்.கே.எம்.தங்கராஜ் (எ) மெய்ஞானமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் சியாம் பிரசாத், உடுமலைப்பேட்டை நகர்மன்றத் தலைவர் எம்.மத்தின், ஒன்றியக்குழு பெருந்தலைவர் மகாலட்சுமி முருகன் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

### தஞ்சாவூர் மாவட்ட அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்

# மாநிலத்தில் சுயமரியாதை இழக்காமல் துணைவேந்தர் நியமனப்பணிகள்!

## உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் பேட்டி!

தஞ்சாவூர், செப்.7-

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் தலைமையில், அனைத்துத் துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை, சந்திரசேகரன், கா. அண்ணாதுரை, டி.கே.ஜி. நீலமேகம், மாநகராட்சி மேயர்கள் சண்.இராமநாதன், க.சரவணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத்,

மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாக ராஜன், மாவட்ட வன அலுவலர் அகில் தம்பி, அவர்கள், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.மு.பாலகணேஷ், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் அவர்கள் ஆகியோரின் அறிவுறுத்தலுக்கிணங்க, அனைத்துத் துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் வருவாய்த் துறை, சமூக பாதுகாப்புத் திட்டம், உயர் கல்வி மற்றும் பள்ளிக் கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தாட்கோ, சமூக நலத்துறை, மாவட்ட குழந்தைகள் நல அலுவலகம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை, பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், மகளிர் திட்டம், சத்துணவுத் திட்டம், கூட்டுறவுத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், தொழிலாளர் நலத் துறை, தேசிய நெடுஞ்சாலைத் துறை, நபார்டு, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம், மீன்வளத்துறை, சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய நலத்துறை, நூலகத் துறை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் போன்ற பல்வேறு துறை சார்ந்த நடைபெற்று வரும் பணிகள், முடிவுற்றப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் போன்ற பல்வேறு பொருள் குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் ஒன்றியக் குழுத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் தங்களின் பகுதிகளுக்கு ஏற்ப கோரிக்கைகளை வைத்தார்கள். அதுமட்டுமின்றி அரசு அலுவலர்களும் தங்களின் திட்டப் பணிகளை விளக்கியதோடு துறைச் சார்ந்த கோரிக்கைகளையும் வைத்தார்கள். இன்றைய கூட்டத்தின் கோரிக்கைகள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அடுத்த ஆய்வுக் கூட்டத்தில் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் தெரிவிக்க வேண்டும். மேலும் நிலுவையில் உள்ள அனைத்து திட்டப் பணிகளையும் விரைவாக தரமாகவும் முடித்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் தெரிவித்தார்கள்.

பின்னர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் : தற்போது 31 துறை ரீதியான ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு துறையும் விரிவாக தங்களுடைய பணி முன்னேற்றம் குறித்து எடுத்துரைத்தனர். இந்த கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளும் கோரிக்கைகளை முன்வைத்தபோது அதை அரசு துறையினர் நிறைவேற்றுவதாக தெரிவித்துள்ளனர்.

தமிழக முதல்வர் எதை செய்ய வேண்டும் என எண்ணுகிறாரோ, அதை அரசு அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் ரயில் பாதையின் இரு தண்டவாளங்கள் போல அதனை மக்களிடம் கொண்டு செல்ல உள்ளனர். தமிழக முதல்வரால் அறிவிக்கப்படும் அனைத்து திட்டங்களையும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் மிகுந்த அக்கறையோடு எடுத்துச் செல்கிறார். அதன்படி பல்வேறு துறைகளில் தஞ்சாவூர் மாவட்டம் மாநில அளவில் பல்வேறு பரிசுகளை பெறக்கூடிய வகையில் செயல்பட்டு வருகிறது. மேலும், பல திட்டங்களை சிறப்பாக கொண்டு செல்ல இந்த ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டங்களில் வழங்கப்படும் மனுக்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த மனுக்கள் மீது அரசு அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தி குறைகளை தீர்க்க வேண்டும். இதற்காக முதல்வரின் சிறப்பு பிரிவான முதல்வரின் முகவரி என்ற பிரிவு செயல்பட்டு வருகிறது. எனவே பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து தீர்வு காணப்படும்.

கல்லூரிகளில் பேராசிரியர் பற்றாக்குறையை இருப்பதை புரிந்து கொண்ட காரணத்தினால் தான், கவுரவ விரிவுரையாளர்கள் திட்டத்தை முதல்வர் செயல்படுத்தினார். அதன் பிறகும் பற்றாக்குறை இருக்கும் பட்சத்தில், கூடிய விரைவில், விரிவுரையாளர்கள் நியமன ஆணை விரைவில் வழங்கப்பட உள்ளது.

பேராசிரியர் காலிப்பணியிடங்கள் தொடர்பான குறைகள் அனைத்தும் விரைவில் தீர்வு காணப்படும். பல்லைக் கழகங்களில் துணைவேந்தர்கள் நியமனத்தில் ஏற்பட்ட இடர்பாடுகள் குறித்து அனைவருக்கும் தெரியும். முதல்வர் தகுந்த கவனம் செலுத்தி வருகிறார்.


சுயமரியாதை இழக்காமல், மாநிலத்தின் தன்மையை கட்டிக் காக்கும் வகையில் துணைவேந்தர் நியமனம் தொடர்பான பணிகள் நடந்து வருகிறது. எல்லாத் துறைகளையும் விட தமிழக நிதி நிலை அறிக்கையில் உயர் கல்வித் துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படுகிறது. அடுத்தடுத்து ஆண்டுகளில் நிதி பற்றாக்குறையை குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

இக்கூட்டத்தில் கும்பகோணம் சார் ஆட்சியர் செல்வி.ஹிருத்யா எஸ்.விஜயன், வருவாய் கோட்டாட்சியர்கள் இலக்கியா, செல்வி.ஜெயஸ்ரீ, ஒன்றியக் குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**இரா. துரைராஜன்**

**அக்டோபர் 7 (2017)**



**நாகப்பட்டினம் மாவட்டத்தில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.**

**1966ல் வட்டத் தலைவராகவும் – 1972 முதல் 1995 ஆம் ஆண்டு வரையிலான 23 ஆண்டுகள் தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.**

**கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வீடுகட்டும் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வார்டு கவுன்சிலராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**